**செய்தி வெளியீடு எண்: 620** **நாள்:20.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**19.08.2019** அன்று, அண்ணா மேலாண்மை நிலையத்தில், ‘‘தகவல் பெறும் உரிமைச் சட்டம், **2005**’’ தொடர்பாக நடைபெற்ற பயிற்சி முகாமை தொடங்கி வைத்து உரையாற்றிய, மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள், ‘‘தகவல் பெறும் உரிமைச் சட்டம், **2005**’’ மற்றும் ‘‘தகவல் பெறும் உரிமைச் சட்டம், **2005** தொடர்பான அரசு ஆணைகளின் தொகுப்பு’’ ஆகிய புத்தகங்கள், தேவைப்படுபவர்களுக்கு, அண்ணா மேலாண்மை நிலையத்தால் வழங்கப்படும் எனவும், ஒரு புத்தகத்தின் மதிப்பு ரூ.**100/–** என்ற அடிப்படையில் வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

எனவே, மேற்கண்ட புத்தகங்கள் வேண்டுவோர், அண்ணா மேலாண்மை நிலையத்தில், ஒரு புத்தகத்திற்கு ரூ.**100/–**ஐ செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம். தபால் அல்லது கூரியர் சேவை மூலம் மேற்கண்ட புத்தகங்களைப் பெற விரும்புவோர், “ANNA INSTITUTE OF MANAGEMENT, CHENNAI-28’’ என்ற பெயரில், ஒரு புத்தகத்திற்கு ரூ.**136/–**க்கு (ரூ.**100** + தபால்/ கூரியர் சேவைக் கட்டணம் ரூ.**36**) வங்கி வரைவோலை (Demand Draft) எடுத்து, ‘‘அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை–**28**’’ என்ற முகவரிக்கு அனுப்பி, தபால்/கூரியர் சேவை மூலம் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**